# அக்டோபர் – 02 – செவ்வாய்

## புனித காவல் தூதர்கள்

**இந்தச் சிறு பிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர். (மத் 18:3)**

## முதல் வாசகம் :யோபு 3 : 1-3, 11 – 17, 20 – 23

இதன்பிறகு யோபு வாய்திறந்து, தாம் பிறந்த நாளைப் பழிக்கத் தொடங்கினார்.யோபு கூறியது "ஒழிக நான் பிறந்த அந்த நாளே! ஓர் ஆண்மகவு கருவுற்றதெனச் சொல்லிய அந்த இரவே! கருப்பையிலேயே நான் இறந்திருக்கலாகாதா? கருவறையினின்று வெளிப்பட்டவுடனே நான் ஒழிந்திருக்கலாகாதா? என்னை ஏந்த முழங்கால்கள் முன் வந்ததேன்? நான் பாலுண்ண முலைகள் இருந்தேன்? இல்லாதிருந்திருந்தால், நான் வெறுமனே கிடந்து துயில் கொண்டிருப்பேன்.பாழானவைகளைத் தமக்குக் கட்டிக்கொண்ட மாநிலத்து மன்னர்களோடும் அமைச்சர்களோடும் அல்லது பொன்னை மிகுதியிருக்கக் கொண்டு, வெள்ளியால் தங்கள் இல்லங்களை நிரப்பின உயர்குடி மக்களோடும் நான் உறங்கியிருந்திருப்பேன்.அல்லது முழுமைபெறாக் கருவைப் போலவும் ஒளியைக் காணாக் குழவியைப்போலவும் அழிந்திருப்பேன். அங்குத் தீயவர் தீங்கு செய்வதை நிறுத்துவர். களைப்புற்றோரும் அங்கு இளைப்பாறுவர். உறுதுயர் உற்றோர்க்கு ஒளி தருவானேன்? உள்ளம் கசந்தோர்க்கு உயிர் கொடுப்பானேன்? சாவுக்கு அவர்கள் ஏங்குகிறார்கள் அதைப் புதையலினும் மேலாய்க் கருதித் தேடுகிறார்கள். ஆனால் அதுவோ வந்த பாடில்லை.கல்லறை காணின் களிப்பெய்தி அகமகிழ்வோர்க்கு, வாழ்வு வழங்கப்படுவதேன்?எவருக்கு வழி மறைக்கப்பட்டுள்ளதோ, எவரைச் சுற்றிலும் கடவுள் தடைச்சுவர் எழுப்பியுள்ளாரோ, அவருக்கு ஒளியால் என்னபயன்?பெருமூச்சு எனக்கு உணவாயிற்று. வேதனைக்கதறல் வெள்ளமாய் ஓடிற்று.

**பதில்பாடல் :** உம்மைக் காத்திட தம் தூதர்க்கு ஆண்டவர் கட்டளையிடுவார்.

## நற்செய்தி : மத்தேயு 18 : 1 – 5, 10

அந்நேரத்தில் சீடர்கள் இயேசுவை அணுகி, "விண்ணரசில் மிகப் பெரியவர் யார்?" என்று கேட்டார்கள். அவர் ஒரு சிறுபிள்ளையை அழைத்து அவர்கள் நடுவில் நிறுத்தி,பின்வருமாறு கூறினார்" நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சிறுபிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப்பெரியவர். இத்தகைய சிறுபிள்ளை ஒன்றை என்பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்."இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருதவேண்டாம் கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

**தியானம்:** குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பார்கள். ஒரு குழந்தைக்கு பொய் சொல்ல தெரியாது, எதனையும் மறைக்கத் தெரியாது. உடனேயே மறந்துவிடுகின்ற சுபாவம் இருக்கும். அவ்வாறுதான் நம் வானக தந்தையும் இருக்கின்றார். ஒருமுறை ஒரு மகனும் தந்தையும் ஆற்றைக் கடக்க நேர்ந்ததாம், அப்போது தந்தை மகனைப் பார்த்து இறுக்கமாக எனது கையை பிடித்துக் கொள் என்று சொன்னாராம். உடனே மகன் அப்பா நீங்கள் என் கையை பிடித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னானாம். அதற்கு தந்தை ஏன் என்று கேட்க வெள்ளம் வந்தால் நான் சிலநேரம் என் கையை விட்டு விடுவேன், ஆனால் நீங்கள் என்ன நடந்தாலும் இறுக பற்றி இருக்கும் உங்கள் கையை விட்டு விட மாட்டீர்கள் என்று சொல்லியதாம். இவ்வாறுதான் எமது தந்தையும் இருக்கின்றார். அவர் நம் கரங்களைப் பற்றி வழிநடத்துகின்றார். என்ன நடந்தாலும் அவர் அந்த பிடியை விடவே மாட்டார். முதல் வாசகத்தில் நாம் பார்க்கும் யோபுவின் வாழ்வில் புயல் வீசியது. பலதரப்பட்ட வேதனைகளை அவர் சந்திக்கும் போது தமது வாழ்வை நினைத்து வருந்துகின்றார். ஆனால் கடவுளை அவர் நிந்திக்கவே இல்லை. அதனால்தான் பல் மடங்கு ஆசீர்வாதத்தை அவரால் பெற முடிந்தது. எமது வாழ்வில் நாம் எப்படி? சிறு தோல்வி, வேதனை எம்மை நிலை குலைய செய்துவிடும். கடவுளை நிந்திக்க தொடங்கி விடுவோம். நன்மைகள் நம்மை நாடி வரும்போது சந்தோஸமாக ஏற்றுக்கொள்ளும் நாம் துக்கம் வரும்போது மட்டும் துவண்டுபோய் விடுகின்றோம். இன்பமும் துன்பமும் நிறைந்ததுதான் வாழ்வு. அதனை சுமந்துதான் நாம் வாழ வேண்டும். அப்போது யோபுவைப் போல் நாம் ஆசீர்வாதங்களால் நிரப்பப் படுவோம். எனவே ஒரு சிறுபிள்ளைபோல் மாறுவோம், அன்பால், மன்னிப்பால் எம் வாழ்வை கட்டுவோம்.